# 'சமூக மறுமலர்ச்சிக்கு பெண்கள் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்'

**ராசிபுரம், மார்ச் 8:** சமூக மறுமலர்ச்சிக்கு பெண்கள் தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என, பட்டிமன்றப் பேச்சாளர் பேராசிரியை பர்வீண் சுல்தானா குறிப்பிட்டார்.

மல்லசமுத்திரம் மஹேந்திரா கல்லூரிகளின் சார்பில், சர்வதேச மகளிர் தின விழா கல்லூரி வளாகத்தில் உள்ள மகாத்மா காந்தி கலையரங்கில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கல்லூரியின் நிறுவனர் தலைவர் எம்.ஜி.பாரத்குமார் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக பர்வீண் சுல்தானா



விழாவில் குத்துவிளக்கேற்றும் பர்வீண் சுல்தானா.

கலந்து கொண்டு, குத்துவிளக்கேற்றி தொடக்கிவைத்தார்.

விழாவில் அவர் பேசியது:

பெண்கள் கற்றலோடு நில்லாமல், சமூக மறுமலர்ச்சி அடைய தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

அறிவு, உணர்வுசார் நெறிமுறைகளுடன் உயர்ந்த நிலையை அடைய வேண்டும். பெண் சமுதாயம் ஒன்றுபட்டு சமூக சீரழிவுகளைக் களைய செயலாற்ற வேண்டும்.

சமுதாயத்தில் பெண்களுக்கான அதிக விழிப்புணர்வுப் பயிலரங்குகளை கல்வியாளர்கள் நடத்த முன்வர வேண்டும் என்றார் அவர்.

விழாவில் கல்லூரியின் செயல் இயக்குநர் ஆர்.சாம்சன் ரவீந்திரன், கல்லூரி முதல்வர்கள் எம்.மாதேஸ்வரன், தேவராஜன் கோபால், என்.மோகன் சுந்தரராஜ், ஜெ.ராஜவேல், மைதிலி, உமாமகேஸ்வரி உள்பட பேராசிரியர்கள், மாணவிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கட்டுரை, பேச்சு, திறனாய்வுப் போட்டிகளில் சிறந்த மாணவிகளுக்கு பரிசுகளுடன் சான்றிதழ்களும் விழாவில் வழங்கப்பட்டன.

தினமணி தருமபுரி